# எட்டு நாளைக்கொரு தண்ணி ஏக்கரக்கு 2,100 கிலோ நெல்



தருமத்துப்பட்டி திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைவேல் அவர்கள் கூறுகையில் எழுபது சென்ட் நிலத்துல கோ 39 சன்ன ரக நெல்லை, இயற்கை முறையில் சாகுபடி செஞ்சேன். 120 நாள் வயசுள்ள இந்தப் பயிர் நல்லா வளர்ந்து,

**பத்தடிக்குப் பத்தடி பாத்தி**

“சாகுபடி நிலத்துக்கு மிக அருகில் நாற்றங்கால் இருப்பது அவசியம். வழக்கமான முறையில் நாற்றங்கால் அமைத்து, ஏக்கருக்கு ஐந்து கிலோ விதைநெல்லைத் தூவ வேண்டும். தண்ணீர் தெளிக்கும்போது அதில் பஞ்சகவ்யாவையும் கலந்து தெளித்தால், நாற்றின் வளர்ச்சி அபாரமாக இருக்கும்.

**ஈர நடவு**

நாற்று தயாராகும்போதே, நடவுக்கான நிலத்தை ரோட்டவேட்டர் இயந்திரத்தைப் பயன்படுத்தி இரண்டு உழவு செய்து புழுதியாக்கி, பத்தடி நீளம், பத்தடி அகலத்தில் பாத்தி எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஈர நடவாக நாற்றை நடவு செய்யும் அதேமுறையில் ஒவ்வொரு மிளகாய், வெங்காயம் நடவு செய்யும் அதே முறையில் ஒவ்வொரு நாற்றாக முக்கால் அடி இடைவெளியில் ஈர நடவு செய்ய வேண்டும்.

**எட்டு நாளைக்கு ஒரு தண்ணீர்**

நடவு முடிந்ததும் அடுத்த நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அடுத்ததாக எட்டு நாளைக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சினால் போதும். கதிர் பிடித்த பிறகு வெயில் அதிகமாக இருந்தால் மூன்று நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொரு முறை நீர் பாய்ச்சும் போதும் பாசன நீரில், ஏக்கருக்கு 500 லிட்டர் அமுதக்கரைசலைக் கலந்து விட்டுக் கொண்டே வந்தால் நிலம் வளமாகும். நடவிலிருந்து 15 நாள் இடைவெளியில் ஒரு டேங்குக்கு (10லி) 300 மில்லி பஞ்சகவ்யா, 100 மில்லி மீன் அமினோ அமிலம், 300 மில்லி வேப்பங்கொட்டைக் கரைசல் இது மூன்றையும் ஒன்றாகக் கலந்து தெளிக்க வேண்டும்.

ஏக்கருக்கு பத்து டேங்க் தேவைப்படும். நடவு செய்த 20, 40 மற்றும் 60-ம் நாட்களில் மற்ற பயிர்களுக்கு எடுப்பது போலவே கொத்து மூலமாக களை எடுக்க வேண்டும்.
கதிர் வைக்கும்போது, பச்சிலைப் பூச்சித் தாக்குதல் கொஞ்சம் இருக்கும். டேங்குக்கு 500 மில்லி அக்னி அஸ்திரம் தெளித்து அதைக் கட்டுப்படுத்தலாம். ஏக்கருக்கு 10 டேங்க் தேவைப்படும். தண்ணீர் குறைவாகக் கொடுப்பதால் வயலில் வெப்பம் அதிகமாக இருக்கும். இதனால், வழக்கமாக நெல் வயல் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும் பூச்சிகள், வயல் பக்கம் எட்டியே பார்க்காது. அதேபோல வயலில் ஆங்காங்கே

பறவைகள் அமர்வதற்கான குச்சிகளை நட்டு வைத்து விட்டால், பூச்சிகளைப் பறவைகளே பார்த்துக் கொள்ளும். அடுத்தது அறுவடைதான்”

**70சென்ட் நிலம் 1,500 கிலோ நெல்**

“நான் பாத்தி நடவுல 3 கிலோ விதை போட்டு 1,500 கிலோ மகசூல் எடுத்திருக்கேன். ஏக்கருக்கு கணக்குப்போட்டா 2,100 கிலோ. வழக்கமான நெல் நடவுல இருக்கற ஆரம்ப கட்டச் செலவுகள் எதுவுமே இல்லாததுனால நிச்சயம் லாபகரமா இருக்கும்”.

**தொடர்புக்கு**

குழந்தைவேல்
தருமத்துப்பட்டி
திண்டுக்கல் மாவட்டம்
அலைபேசி 98436-56904